**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: 61

| | | | |
|---|---|---|---|
| Name: | சண்முக சுந்தரம் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A6, A11, A17, A19 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 20.06.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மலையான் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த காசிவிஸ்வநாதன் மகன் ராஜ் என்பவரை தெரியாது. 15 வருடங்களுக்கு முன்பு தென்காசி காசி விஸ்வநாதன் கோயில் முன்பாக போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கு தென்காசி அப்துல்ரசாக் என்பவர் மகன் சுபகான் என்பவரை தெரியாது. நான் கையொப்பம் இட்ட ஆவணங்கள் என்னிடம் காட்டப்படுவதுதான் அது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ. 3 ஆகும். அத்தாட்சி என தலைப்பிட்ட ஆவணத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆகும். நான் அவ்வாறு கையொப்பம் இட்ட தேதி ஞாபகம் இல்லை. கையொப்பம் இடப்பட்ட நேரமும் ஞாபகம் இல்லை. குமார் பாண்டின் சகோதரர்கள் மற்றும் கூட்டாளிகளை தெரியும். ஆயிரப்பேரியில்

உள்ள சுபாஸ் என்ற பள்ளிகூடம் தெரியும். நான் போலீசாருடன் சேர்ந்து அந்த பகுதிக்கு செல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது 26.09.2007ம் தேதி 15.00 மணிக்கு நானும் தென்காசி காசிவிஸ்வநாதன் மகன் ராஜ் என்பவரும் தென்காசி அரசு பழைய மருத்துவமனை பக்கம் ஆயிரம்பேரி விலக்கு ரோட்டில் நின்றபோது அங்கு தென்காசி காவல் நிலைய குற்ற எண் 461/2007, பிரிவு 147, 148, 341, 324, 307, 302 இதச வழக்கின் விசாரணையை நடத்திவரும் சேரன்மாகாதேவி காவல்துணைகண்காணிப்பாளர் அவர்கள் போலீஸ்பார்ட்டியுடன் வந்து அங்கு நின்ற தென்காசி 131A நடுப்பேட்டை தெரு அப்துல் ரசாக் மகன் சுபகான் என்பவரை எங்கள் முன்பு கைது செய்து விசாரிக்க அவர் அந்தவித துன்புறுத்தலும் இன்றி தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்கும் கொடுத்தார் என்றும் அதை அவர் சொல்ல சொல்ல எழுதினார்கள் என்றும் அதில் அவர் 14.08.2007ம் தேதி காலை 10.15 மணிக்கு அலாவுதின்,ஹனிபா ஆகியோர் பார்ட்டியுடன் சேர்த்து கூலக்கடை பஜார் விலக்கில் வைத்து அம்பாசிடர்காரில் வந்த குமார்பாண்டியன் தம்பிகள் சக்திபாண்டியன் பார்ட்டியினரை மறித்து அரிவாள் மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கியபோது மேற்படி சுபகான் என்பவரும் கையில் அரிவாளுடன் எதிர்பார்ட்டியை மறித்து அங்கும் இங்கும் மறித்து செயல்பட்டதாக கூறினார் என்றும் அந்த வாக்குமூலத்தின் பேரில் ஆயிரம்பேரி ரோட்டில் சுபாஸ் ஸ்கூல் பக்கம் உள்ள எதிரியின் தோட்டத்தில் வைத்து 16.15 மணிக்கு செடி மறைவில் மண்ணுக்குள் இருந்து எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சி தயார் செய்து காவல்துணை கண்காணிப்பாளர்

அவர்கள் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ராஜ் என்பவரும் கையொப்பம் போட்டோம் என்றும் தன்னை சேரன்மாகாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

கையொப்பங்களை எழுதப்படாத தாளில் பெற்றுக்கொண்டனர் . தென்காசி காசி விஸ்வநாதர்கோவிலில் வைத்து போலீசார் கையொப்பம் கேட்டனர். நான் போலீசாரிடம் வாக்குமூலம் எதுவும் தரவில்லை. என்னை போலீசார் விசாரணை எதுவும் செய்யவில்லை. கையொப்பம் போட்டபின்னர் எந்தகாலத்திலும் என்னை போலீசார் விசாரிக்கவில்லை.